**புதுச்சேரி அரசு**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
**காரைக்கால்**

*****

**செய்திக்குறிப்பு** தேதி: 24.12.2019

புதுச்சேரி மாநில மேதகு துணைநிலை ஆளுநர் அவர்கள் மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை புதுச்சேரியில் தனது அலுவலகத்தில் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு வருவதைப்போல் **27.12.2019** வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை காரைக்கால் மாவட்ட மக்களின் குறைகளை கானொளி காட்சி மூலம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கேட்டறிய உள்ளார்கள்.

எனவே காரைக்கால் மாவட்ட பொதுமக்கள் தங்களுடைய குறைகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து அதற்கான தீர்வு காண இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களை கேட்டுக் கொள்கிறார்கள். மேலும் பொதுமக்கள் **27.12.2019** காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை ஆட்சியர் அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் தங்கள் குறைகளை எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆட்சியர் அவர்கள் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார்கள்.

GOVT. OF PUDUCHERRY
INFORMATION & PUBLICITY DEPT.
KARAIKAL

**மாவட்ட ஆட்சியரின் செயலாளர்**